# தமிழின் சிறப்பம்சங்கள்

தமிழ் மொழி உலகின் தொன்மையான செம்மொழியாக திகழ்கிறது தமிழில் பட்டம் பெறுபவர்கள் தரணி ஆள முடியும் என்பதற்கு தமிழகமே சான்றாக உள்ளது

நமது தாய்மொழியான தமிழின் சிறப்புகளை அறியவும் அதை உலகிற்கு எடுத்துச் சொல்லவும் தமிழ் இலக்கிய இலக்கண படிப்புகள் உதவுகின்றன

தமிழில் இளங்கலை [பி.ஏ ]முதல் முனைவர் [ பிஎச்.டி ] பட்டம் வரை பயிலலாம். உடன் கல்வியியல் பட்டமும் படிப்பவர்களுக்கு ஆசிரியர் பணி வாய்ப்புகள் காத்திருக்கின்றன

**பி.ஏ, பி.எட், எம்.ஏ,எம்.எட், பயிலுவோருக்கு உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர் பணிகள் கிடைத்து வருகின்றன. அனைத்து கல்வி நிலையங்களிலும் தமிழாசிரியர் தேவை உள்ளது.**

**இதேபோல கலை ,அறிவியல் கல்லூரிகளிலும் தமிழ்ப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பணியிடத்துக்கு எம்.பில், பிஎச்.டி தமிழ் படித்தோர்  தேர்வு செய்யப்படுகின்றனர்.**

**இதைத் தவிர தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் தமிழில் பயின்றோர்  எளிதாக வெற்றி பெற முடியும்.**

# <u>எண்ணற்ற மாற்று வாய்ப்புகள்</u>

ஊடகங்களில் தமிழ் படித்தோருக்கான வேலைவாய்ப்புகள் நிரம்பிக் கிடக்கின்றன . குறிப்பாக இதழியல் துறையில் அதிகமான வாய்ப்புகள் உள்ளன.

பத்திரிக்கை, சின்னத்திரை , வானொலி பண்பலை - இவற்றில் இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவில் தமிழர்கள் வாழும் இடங்களிலும் தமிழ் படித்தோருக்கு நல்ல வாய்ப்புகள் உண்டு.

தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி தொகுப்பு ,செய்தி வாசிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு ஆகிய பணிகளில் தமிழ் பட்டதாரிகள் கோலோச்ச முடியும்.

பிரசித்தி பெற்ற பி.பி.சி, சீனா ,ஜப்பான் ,இலங்கை, ஆஸ்திரேலியா, அமெரிக்கா வானொலிகளில் தமிழ்மொழி பிரிவு உள்ளது. அங்கும் தமிழ் கற்றறிந்தோர் அதிக ஊதியத்துடன் கூடிய பணிகள் கிடைக்கின்றன .

தவிர தற்கால விளம்பரத் துறையிலும் தமிழ் பட்டதாரிகளுக்கு நல்ல வாய்ப்புகள் காணப்படுகின்றன.

## பதிப்பகங்கள்

கணினி அச்சு தொடர்பான நிலைகளில்
பழந்தமிழ் இலக்கியங்களை அச்சிடுதல்,
மின்னுருவேற்றல்,
மொழிபெயர்ப்புத் துறை ,
இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் ஓதுவார்கள் தேர்வு செய்யப்படுவது
இவற்றுக்கெல்லாம் சிறப்பான தமிழறிவு தேவைப்படுகிறது.

இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டால் தமிழ் என்றைக்கும் பணி வாய்ப்பளிக்கும் பாடமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை

## வெளிநாடுகளில் பணி வாய்ப்பு

அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய க்நாடுகள் ,ஆஸ்திரேலியா ,மலேசியா, சிங்கப்பூர், அரபு நாடுகளிலும் தமிழர்கள் பணி நிமித்தமாக குடிபெயர்ந்து வசிக்கின்றனர் .

அங்கு அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் மறந்து விடக்கூடாது என்பதற்காக தமிழ் கற்பிக்கும் பள்ளிகளில் சேர்க்கின்றனர். அங்கும் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர் .

உலகம் முழுவதும் தமிழ் படிப்புக்கு மிகுந்த வரவேற்பான நிலை உள்ளது தமிழ் படிக்கும் மாணவர்கள் இதை உணர்ந்து தங்கள் தகுதிகளை வளர்த்துக்கொண்டால் சிறப்பான எதிர்காலம் நிச்சயம் உண்டு